DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC.196 of 2015

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 3

Name : திரு. சிவராமன்

Age : 36

Father's/Husband's Name : சின்னசாமி

Village : ஆவலக்கம்பட்டி

Taluk : கிருஷ்ணகிரி

Occupation : சலூன் கடை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of January 2021

முதல் விசாரணை: நாள்.04.01.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சலூன் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தேதி, மாதம் ஞாபகமில்லை, சுமார் 6, 7 வருடத்திற்கு முன்பு காரணம்பேட்டையில் நான் சலூன் கடை வைத்திருந்த சமயம் எனது கடைக்கு அருகில் உள்ள பேக்கரி கடையில் திருட்டுபோனது சம்பந்தமாக போலீசார் அங்கு வந்திருந்தார்கள். போலீசார் அங்கு வந்து விசாரித்துகொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் ராமன் என்பவரும், நானும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கையொப்பம் நான் அப்போது போட்டுக்கொடுத்ததுதான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2., போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பு கு.வி.

நான் எத்தனை வருடங்களாக சலூன் கடை வைத்துள்ளேன் என்றால் 13 வருடங்களாக வைத்துள்ளேன். திருட்டுபோன கடை உரிமையாளரை 8 வருடங்களாக எனக்கு தெரியும். இன்று காலை போலீசார் எதையும் படித்து காட்டினார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்த போலீசாரின் பதவி என்ன என்று எனக்கு தெரியாது. இரண்டிற்கு மேற்பட்ட போலீசார் இருந்தார்கள். நான் கையொப்பம் செய்த பேப்பரில் ஏற்கனவே எழுதிவைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்